செ.வெ.எண்: 64 நாள்: 30.01.2018

**புதுக்கோட்டை மாவட்டத்தில் ஸ்பர்ஷ் தொழுநோய் விழிப்புணர்வு உறுதிமொழியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் அனைவரும் எடுத்துக்கொண்டனர்.**

புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் மண்டல பொதுசுகாதார பயிற்சி நிலைய வளாகத்தில் தேசிய தொழுநோய் ஒழிப்புத்திட்டம் புதுக்கோட்டை மாவட்டம் சார்பில் ஸ்பர்ஷ் தொழுநோய் விழிப்புணர்வு இயக்க இருவார நிகழ்வு துவக்கவிழா மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (30.01.2018) நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஸ்பர்ஷ் தொழுநோய் விழிப்புணர்வு கையெழுத்து இயக்கத்தை துவக்கி வைத்தும், தொழுநோயால் பாதிக்கப்பட்டு அரசு மருத்துவமனைகளில் உரிய மருத்துவ சிகிச்சை மேற்கொண்டு குணமடைந்த நபர்களை பொன்னாடை போர்த்தியும் கௌரவித்தார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஸ்பர்ஷ் தொழுநோய் விழிப்புணர்வு உறுதிமொழியான "தொழுநோய், மைக்கோ பாக்டீரியம் லெப்ரே என்ற பாக்டீரியா கிருமியினால் காற்றின் மூலம் பரவுகிறது என்பதனை நான் அறிவேன். உணர்ச்சியற்ற தேமல், படை போன்ற தோல் நோய் உள்ளவர்களையோ அல்லது தொழுநோயினால் உடல் குறைபாடு உள்ளவர்களையோ எனது குடும்பத்திலோ அல்லது வீட்டின் அருகிலோ இருந்தால் உடன் அவர்களை அருகில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் அல்லது அரசு மருத்துவனைகளுக்கு அழைத்துச் சென்று சிகிச்சை எடுக்க ஏற்பாடு செய்வேன். அவர்களை அன்பாகவும், எனது குடும்ப உறுப்பினர்கள் போலவும் வேறுபாடு இல்லாமல் உரிய மரியாதையுடன் நடத்துவேன்.

தொழுநோய் முற்றிலும் குணமாகக் கூடியது. ஆரம்ப நிலை சிகிச்சை உடல் குறைபாட்டை ஏற்படுத்தாது, ஊனத்தை தடுக்கும். தொழுநோயாளிகளை ஒதுக்கக்கூடாது போன்ற விபரங்களை அண்டை அயலாருக்கு தெரிவித்து விழிப்புணர்வினை ஏற்படுத்துவேன். தேசப்பிதா மகாத்மா காந்தியின் கனவை நனவாக்கும் வகையில் தொழுநோய் இல்லாத இந்தியா உருவாக அனைவருடன் இணைந்து ஒத்துழைப்பேன் என்று உளமார உறுதி கூறுகிறேன்" என வாசிக்க அனைத்து மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் ஸ்பர்ஷ் தொழுநோய் விழிப்புணர்வு உறுதிமொழியினை எடுத்துக்கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் இணை இயக்குநர் (ஊரக நலப்பணிகள்) மரு.ராதிகா, துணை இயக்குநர்கள் (பொதுசுகாதாரம்) மரு.பரணிதரன், மரு.கலைவாணி, மாவட்ட நலக்கல்வியாளர் (தொழுநோய்த்திட்டம்) திரு.வெங்கட்ராமன் மற்றும் மருத்துவர்கள் செவிலியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**